I Additional District Court, Thoothukudi.

<u>O.S.No. 68/2021 நாள் : 29.10.2025</u>

<u>வா.சா.1– திரு. ஜெயக்குமார் சந்தோஷ்.</u>

**1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–**

நீ.சா.ஆ 1ல் தாவா சொத்தில் நிறைய வீடுகள் இருப்பதாக நீதிமன்ற ஆணையர் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அந்த வீடுகள் கட்டப்பட்டு பல ஆண்டுகள் இருக்கும் என்றால் சரிதான். அந்த வீடுகளுக்கு தனித்தனியாக மின் இணைப்பும், குடிநீர் இணைப்பும் உள்ளது என்றால் குடிநீர் இணைப்பு கொடுக்கவில்லை, மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. நீ.சா.ஆ 2ல் ETCS என்று குறிப்பிடப்பட்டுள்ள பாதைதான் அதற்கு வடபுறமும், தென்புறமும் உள்ள சொத்துக்களுக்கு இருக்கும் ஒரே வழி என்றால் சரிதான். ஆனால் மேற்படி பாதை எங்கள் சொத்தை ஆக்கிரமிப்பு செய்து போடப்பட்டுள்ளது. மேற்படி பாதையையும் சேர்த்துதான் தபசில் சொத்தாக காட்டியுள்ளேன். ஆனால் பாதை என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி பாதை பிரதிவாதிகளுக்கு விற்ற நபர்கள் போட்ட பாதை என்றால் சரிதான். மேற்படி பாதை இன்று வரை சாயர்புரம் பேரூராட்சி கட்டுப்பாட்டில் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி பாதையின் முகப்பில் சாயர்புரம் தேர்வு நிலை பேரூராட்சி அம்மன் கோவில் 2வது குறுக்குத் தெரு மேற்கு என்று

பலகை வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாங்கள் ஆட்சேபித்தபோது பலகையை நாங்கள் வைக்கவில்லை என்று ஊராட்சி மன்ற செயல் அலுவலர் சொல்லிவிட்டார். அந்த பலகையை அப்புறப்படுத்த வேண்டுமென்று வருவாய்த்துறையினருக்கோ, காவல்துறையினருக்கோ நான் விண்ணப்பம் கொடுக்கவில்லை.

M THANDAVAN
Digitally signed by M THANDAVAN
Date: 2025.10.29 17:22:52 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.